


# மரித்துப்போன மனிதம்!

"நம்மூர்ல செத்தவங்களுக்குப் பதினெட்டாம் நாள் காரியம்போல, இது என்ன 180-வது நாள் காரியமா? இதோ என் கையில இருக்குறது புத்தகம் இல்லீங்க. இது சமாதி'' நக்கீரன் கோபாலின் வார்த்தைகள் அந்த நிகழ்ச்சிக்கு 'கன'கச்சிதமாகப் பொருந்தித்தான் போயின.

புரட்டப் புரட்ட வேதனையைவிட நமக்கு வெட்கத்தையே அதிகம் தரும் ஈழ ரணங்களின் தொகுப்பான 'மௌனத்தின் வலி' என்ற நூறுபக்க சமாதி வெளியிடும் நிகழ்ச்சிதான் அது.

குழந்தைகள் திருநாள் என இந்தியாவில் ஓதப்படும் கடந்த நவம்பர் 14-ம் நாளில்தான், ஈழத் தமிழ்க் குழந்தைகளின் வலிநிறைந்த காட்சி, கவிதைகளின் தொகுப்பை சென்னையில் வெளியிட்டது போருக்கு எதிரான பத்திரிகையாளர்கள் அமைப்பு.

துக்கம் நிகழ்ந்த வீட்டுக்குச் சென்று ஒப்பாரி வைப்பதுதான் தமிழ் மரபு. ஆனால், இருந்த இடத்திலிருந்தே ஈழத்தில் நிகழ்ந்த மரணங்களுக்கு ஒப்பாரி வைக்கும் கதறல் வாக்குமூலமாகவே நடந்தது இந்த நிகழ்ச்சி.

இதில் பேசிய நடிகர் சிவகுமார், அந்தத் தொகுப்பில் இருந்த வலி நிறைந்த வரிகளை துயர்க்குரலில் கூட்டத்தினரோடு பகிர்ந்துகொண்டு உருக வைத்தார்.

அடுத்துப் பேசிய இயக்குனர் முருகதாஸின் பேச்சில் வலியும் கோபமும் கொப்பளித்தன.

''குஜராத்ல பூகம்பம்னா அவங்க பட்ட அதே வலியோட நிதி திரட்டி தர்றதுல தமிழ்நாடுதான் முதல் இடத்துல இருக்கு. கார்கில் யுத்தம்னா அதுக்கு நிதி கொடுக்கறதுலயும் நம்மதான் முதல்ல நிக்கிறோம். ஆனால், கூப்பிடு தூரத்துல தமிழ் இனமே அழிக்கப்பட்டிருக்கு. இதப் பத்தி தமிழ்நாடு தாண்டி யாரும் காதுகூட கொடுக்கலையே? இது ஏன்?னு எனக்குத் தெரியலை. எங்க ஊர்ல கட்டடம் கட்டும்போது பூமி பூஜை போடுவாங்க. புல்டோசர்ல புழு பூச்சி மாட்டி செத்துடக் கூடாதுன்னு நாங்க வேண்டிக்குவோம். ஆனா, 50 ஆயிரம் தமிழர்களை புல்டோசர்ல ஏத்தியே கொன்னுருக்கான் சிங்களக் காரன். மும்பையில பிரபல தாதா தாவுத் இப்ராஹிமை கொடுமைக்காரன்னு சொல்லுவாங்க. அவனோட கூலிப்படை கூட காசுக்காகப் பெண்களையும், குழந்தைகளையும் கொல்லமாட்டோம்னு ஒரு கட்டுப்பாடு வச்சிருக்காங்க. ஒரு கூலிப்படைக்கு இருக்குற தார்மீகக் கட்டுப்பாடுகூட இல்லாத சிங்கள அரசாங்கத்தை என்னன்னு சொல்றது?'' என விம்மினார் முருகதாஸ்.

அனைவரையும் மன்னித்தே பழக்கப்பட்டவர்கள் பாதிரியார்கள். ஆனால், தென்னிந்திய திருச்சபை பிஷப் சின்னப்பாவை சீற வைத்துவிட்டது ஈழக் கொடூரப் புகைப்படத் தொகுப்பு.

''சிலர் பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுகின்றனர். ஈழப் பிரச்னையும் அப்படி சிலரால் ஆக்கப்பட்டுள்ளது. ராஜபக்ஷே இன்று சிரிக்கலாம். அவர் அழுது மார்பிலே அடித்துக்கொண்டு அழும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. உலகில் முதன்முதலாகத் தோன்றிய இனம் தமிழ் இனம். ஈழத்தில் அவர்கள் சிந்திய ரத்தம் பழி வாங்காமல் விடாது. எந்த ஒரு குற்றமற்ற ரத்தமும் அநியாயமாகச் சிந்தப்பட்டால் அது பழிவாங்கியே தீரும்'' என்றார் வலியின் உச்சத்தில்.

''நான் இங்கு இந்த மேடையில் இருப்பதற்கு மனிதன் என்பதுதான் ஒரே காரணம்'' என ஆரம்பித்த நடிகர் பிரகாஷ்ராஜ், ''போர் என்பது எப்போதும் நியாயம் கிடையாது. ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். போரில் பெரியவர்களை கொல்வதற்கு ஆயிரம் காரணங்களை நீங்கள் உருவாக்கிக் கூறலாம். ஆனால் இரண்டு வயது, மூன்று வயது குழந்தைகளை கொல்வதற்கு ஒரே ஒரு காரணமாவது கூற முடியுமா! இலங்கையில் நடந்தவற்றை தடுக்கக்கூட பெரியவங்களால முடியவில்லை. எல்லா பெரியவங்களுக்கும் காது இல்லை. அவலத்தைத் தடுத்துநிறுத்த மனசும் இல்லை.

ஒரு மானை வேட்டையாடினால் அதை பாதுகாக்க கோர்ட், வனவிலங்கு சட்டம்னு போராட அமைப்புகள் இருக்கு. ஆனால், மனிதர்களை நாம் வாழும் காலத்திலேயே கொல்றாங்க. அதற்கு நாம் எதுவும் செய்யவில்லை. மௌன மடமைகளை நாம் என்னவென்று பேசுவது? ஈழ மக்கள் அடிபடுவதை வேடிக்கை பார்க்கின்றனர். ஓர் அவலத்தைத் தட்டிக்கேட்காமல் வேடிக்கை பார்ப்பது நடந்த குற்றத்தைவிட பாவம்'' என வெதும்பித் தீர்த்தார்.

## வெளிச்சம் போட்டுக் காட்டிய 'மௌனத்தின் வலி'


நூல் வெளியீட்டு நிகழ்வில்...

ஜக்கி வாசுதேவ் பேசும்போது... ''நம்ம கையில பெரிய அளவுக்கு சக்தி இருக்குது. அதை நாம் முறையா பயன்படுத்தவேண்டும். ஹிட்லர், முசோலினின்னு எப்படி இருப்பாங்கன்னு நமக்குள் கேள்வி எழும். சாமான்ய மனிதர்கள் சினிமாவுல பார்த்திருப்பாங்க. நம் கண் முன்னாடியே, நம்ம வீட்டு வாசல்லயே நடந்துள்ளது. இந்த விஷயங்களை பார்க்கும்போது மனிதத் தன்மை படுத்துவிட்டது. மனிதன் சாகவில்லை. மனிதத் தன்மை செத்துவிட்டது. மனிதர்களை பிரிப்பதற்கு எத்தனையோ கருவிகள் இருக்கின்றன. ஆனால் சேர்ப்பதற்கு?'' என கேட்டார்.

அரங்கத்தில் நிகழ்ந்த இந்தக் கண்ணீர் நிகழ்ச்சிக்குக் காது கொடுத்ததோ என்னவோ, அரங்கத்துக்கு வெளியே வானமும் தன் வலியை அழுது தீர்த்துக் கொண்டது. கண்ணீரோடு வெளியே வந்து அண்ணாந்து பார்த்தால் ஒரு மேகம், ஈழ வரைபடம்போல மிதந்து கொண்டிருந்தது. நாம் தலைகுனிந்து கொண்டோம்!

■

-சீனு, ஆரா

### 'மௌனத்தின் வலி'யிலிருந்து சில வரிகள்...

காயம் கொண்ட நீ...
கையாலாகாதவனாய் நான்...
நம்மைக் கூடவிடாமல்
காவல் காக்கிறது
வெட்கம் கெட்ட கடல்!



-பச்சியப்பன்

தாய்முலைதனை இழந்தது ஒருநாள்
பேய்வதை முகாம் திறந்தது மறுநாள்
தமக்கையின் கருவறுந்தது ஒருநாள்
தகப்பனின் உடம்பு மிதந்தது ஒருநாள்
... ...
நம்பு மகளே நானிருக்கிறேன்
தனித் தமிழீழத் தாயாவாய் நீ
மறுநாள்!

-ராஜுமுருகன்

எட்டிய தூரத்தில்
எழவு வீடாக எரியும்
கண்ணீர் நிலம்!
கொன்று குவிக்கக்
கொல்லைப் புறமாய்
இவர்கள் எங்களை
ஆளனுப்பித்
தொட்டிலை ஆட்டும்
ஈனப்பிறவியாய்
வாழ்வீர்கள் இன்று!
வரலாறு நாளை
முகத்திரை கிழித்துக்
காறி உமிழ்ந்து
கழுவில் ஏற்றும்!





-அமுதகீதன்

வளைத்தபோது வலிக்கவில்லை
துளைத்தபோது வலிக்கவில்லை
சிதைத்தபோது வலிக்கவில்லை
எரித்தபோதும் வலிக்கவில்லை
அங்கே நீங்கள்
எதுவுமே செய்யாமல்
இருந்தபோதுதான்
வலித்தது அதிகமாய்
அதிக அதிகமாய்!



-மு.மேத்தா